**சுருக்கம்**

ஆட்சி எல்லை – கோயம்புத்தூர் மாவட்டம் – கோயம்புத்தூர் வருவாய் கோட்டத்தைப் பிரித்து கோயம்புத்தூர் (வடக்கு) என்ற ஒரு புதிய வருவாய் கோட்டம் உருவாக்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வருவாய் [வ.நி.1(1)] துறை**

**அரசாணை (நிலை) எண்.64** **நாள்: 09.02.2016**

**படிக்கவும்:**

1. அரசாணை எண்.279, வருவாய்த் துறை, நாள் 09.06.2003
2. அரசாணை (2டி) எண்.176, வருவாய்த் துறை, நாள் 15.06.2012.
3. மாவட்ட ஆட்சியர், கோயம்புத்தூர் அவர்களின் கடித எண். ந.க.16542/ 2014/அ1, நாள் 18.11.2014
4. முதன்மைச் செயலர் (ம) வருவாய் நிருவாக ஆணையர் கடித எண். ந.க. பணி6(3)/51154/ 2014, நாள் 27.3.2015.

---

**ஆணை:-**

கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள கோயம்புத்தூர் கோட்டத்தைப் பிரித்து கோயம்புத்தூர் (வடக்கு) என்ற ஒரு புதிய வருவாய் கோட்டம் உருவாக்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 31.08.2015 அன்று தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதி 110–இன் கீழ் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்.

2. மேற்கண்ட அறிவிப்பிற்கிணங்க, கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர், கோயம்புத்தூர் வருவாய் கோட்டத்தில் 7 வட்டங்கள் உள்ளன என்றும் இவ்வருவாய் கோட்டமானது பரப்பளவில் மிக பெரியதாகவும், கோயம்புத்தூர் மாநகராட்சி, மேட்டுப்பாளையம் நகராட்சி மற்றும் 35 பேரூராட்சி, 110 ஊராட்சிகளை உள்ளடக்கியதாகவும் உள்ளது எனவும், தற்போது கோயம்புத்தூர் மாநகராட்சி விரிவாக்கம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, ஏற்கனவே இருந்த கவுண்டம்பாளையம், குனியமுத்தூர், குறிச்சி, நகராட்சிகள் கோயம்புத்தூர் மாநகராட்சிக்குள் கொண்டு வரப்பட்டுள்ளன என்றும் கிழக்கிலிருந்து மேற்காக சுமார் 75 கி.மீட்டர் தூரத்தையும் கொண்டுள்ளது எனவும் இக்கோட்டத்தில் கோயம்புத்தூர் மாநகராட்சியின் அனைத்து பகுதிகளும் அடங்கியுள்ளன என்றும் கோயம்புத்தூர் மாநகரில் கோயம்புத்தூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை அமைந்துள்ளது எனவும், இம்மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி இறந்துபோகும் இனங்களில் குற்றவியல் நடைமுறைச் சட்டப்பிரிவு 174–ன்படி உள்ள வழக்குகளில் உட்கோட்ட நடுவர் என்ற முறையில் கோட்டாட்சியர் நேரடியாக விசாரணை நடத்த வேண்டிய நிலை உள்ளது எனவும், தொழில் வளர்ச்சியின் காரணமாக பிற மாவட்டங்களிலிருந்து மக்கள் தொழில் நிமித்தம் புலம் பெயர்ந்து, வந்துகொண்டிருப்பதாகவும், அவர்களின் தேவை அதிகரித்ததன் பொருட்டு கல்லூரிகள், பள்ளிகள் ஆகியவை அதிகமாக துவங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன என்றும் அரசுத்துறை மற்றும் அரசு நிறுவனங்களுக்கு நிலமெடுப்பு போன்ற பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே, கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள, கோயம்புத்தூர் வருவாய் கோட்டத்தைப் பிரித்து பெரியநாயக்கன்பாளையத்தை

தலைமையிடமாக கொண்டு கோயம்புத்தூர் (வடக்கு) என்ற ஒரு புதிய வருவாய் கோட்டம் அமைக்கலாம் எனவும் மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

3. கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் வருவாய் கோட்டத்தைப் பிரித்து புதிய கோயம்புத்தூர் வடக்கு வருவாய் கோட்டம் உருவாக்குவதற்கான ஆட்சி எல்லை விவரங்கள் பின்வருமாறு:-

| வ எண் | ஆட்சி எல்லை விளக்கங்கள் | தற்போது உள்ளபடி | உத்தேச பிரிவினைக்கு பின் வருவாய் கோட்டம் | | அரசாணை எண்-279, வ.து. நாள்: 09.06.2003-ன்படி குறித்த நிலைப்படி |
|---|---|---|---|---|---|
| | | | உத்தேசிக்கப்பட்ட வருவாய்க் கோட்டம் | எஞ்சிய கோட்டம் | |
| 1 | தலைமையிடம் | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் வடக்கு கோட்டம் | கோயம்புத்தூர் தெற்கு கோட்டம் | - |
| 2 | மக்கள் தொகை | 2277507 | 728381 | 1549126 | குறைந்த அளவு 4,00,000 முதல் அதிக அளவு 15,00,000 |
| 3 | பரப்பளவு | 2541.76 ச.கி.மீ | 1207.31 ச.கி.மீ | 1334.45 ச.கி.மீ | குறைந்த அளவு 1000ச.கி.மீ அதிகளவு 4500 ச.கி.மீ |
| 4 | வருவாய் கோட்டத்தின் பெயர் | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் வடக்கு கோட்டம் | கோயம்புத்தூர் தெற்கு கோட்டம் | |
| 5 | சட்டமன்ற தொகுதி | 1.108-அவிநாசி பகுதி<br>2.111 மேட்டுப்பாளையம்<br>3.118-கோயம்புத்தூர் வடக்கு<br>4.120-கோயம்புத்தூர் தெற்கு(பகுதி)<br>5.117-கவுண்டம்பாளையம்<br>6.121-சிங்காநல்லூர்<br>7.120-கோயம்புத்தூர் தெற்கு (பகுதி)<br>8.119-தொண்டாமுத்தூர்<br>9.122-கிணத்துக்கடவு(பகுதி) | 1.108-அவிநாசி பகுதி<br>2.111 மேட்டுப்பாளையம்<br>3.118-கோயம்புத்தூர் வடக்கு<br>4.120-கோயம்புத்தூர் தெற்கு(பகுதி)<br>5.117-கவுண்டம்பாளையம் | 1.121-சிங்காநல்லூர்<br>2.120-கோயம்புத்தூர் தெற்கு (பகுதி)<br>3.119-தொண்டாமுத்தூர்<br>4.122-கிணத்துக்கடவு (பகுதி) | |
| 6 | பாராளுமன்ற தொகுதி | 1.20-கோயம்புத்தூர்(பகுதி)<br>2.19-நீலகிரி(பகுதி)<br>3.21-பொள்ளாச்சி(பகுதி) | 1.20-கோயம்புத்தூர்(பகுதி)<br>2.19-நீலகிரி(பகுதி) | 1.20-கோயம்புத்தூர்(பகுதி)<br>2.21-பொள்ளாச்சி(பகுதி) | |
| 7 | மாநகராட்சி எண்ணிக்கை | கோயம்புத்தூர் மாநகராட்சி | | கோயம்புத்தூர் மாநகராட்சி | |
| 8 | வட்டங்களின் எண்ணிக்கை | 7<br>1. கோயம்புத்தூர் (தெற்கு)<br>2. பேரூர்<br>3. மதுக்கரை<br>4. சூலூர்<br>5. கோயம்புத்தூர் (வடக்கு)<br>6. அன்னூர்<br>7. மேட்டுப்பாளையம் | 3<br>1. கோபம்புத்தூர் (வடக்கு)<br>2. அன்னூர்<br>3. மேட்டுப்பாளையம் | 4<br>1. கோயம்புத்தூர் (தெற்கு)<br>2. பேரூர்<br>3. மதுக்கரை<br>4. சூலூர் | குறைந்த அளவு இரண்டு வட்டங்கள் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9 | நகராட்சி எண்ணிக்கை பெயர் | மேட்டுப்பாளையம் நகராட்சி | மேட்டுப்பாளையம் நகராட்சி | | |
| 10 | ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை (பெயருடன்) | 1.சர்க்கார் சாமக்குளம்<br>2.அன்னூர்<br>3.காரமடை<br>4.பெரியநாயக்கன் பாளையம்<br>5.தொண்டாமுத்தூர்<br>6. சூலூர்<br>7. சுல்தான்பேட்டை<br>8. மதுக்கரை | 1.சர்க்கார் சாமக்குளம்<br>2.அன்னூர்<br>3.காரமடை<br>4.பெரியநாயக்கன் பாளையம் | 1.தொண்டா முத்தூர்<br>2. சூலூர்<br>3. சுல்தான்பேட்டை<br>4. மதுக்கரை | |
| 11 | டவுன் பஞ்சாய்த்துக் களின் எண்ணிக்கை | 1.கூடலூர்<br>2.இடிகரை<br>3.காளப்பட்டி<br>4.காரமடை<br>5.நரசிம்மநாயக்கன் பாளையம்<br>6.பெரியநாயக்கன் பாளையம்<br>7.சரவணம்பட்டி<br>8,சர்க்கார் சாமக்குளம்<br>9.சிறுமுகை<br>10.துடியலூர்<br>11.வெள்ளக்கிணர்<br>13.அன்னூர்<br>14..ஆலாந்துறை<br>15..செட்டிப்பாளையம்<br>16..சின்னவேடம்பட்டி<br>17.தாலியூர்<br>18.எட்டிமடை<br>19.இருகூர்<br>20.கண்ணம்பாளையம்<br>21.கருமத்தம்பட்டி<br>22..மதுக்கரை<br>23.மோப்பிரிபாளையம்<br>24.ஒத்தக்கால் மண்டபம்<br>25.பள்ளபாளையம்<br>26.பேரூர்<br>27.புலுவபட்டி<br>28. சூலூர்<br>29.தென்கரை<br>30.திருமலையம்பாளையம்<br>31.தொண்டாமுத்தூர்<br>32.வடவள்ளி<br>33.வேடபட்டி | 1.கூடலூர்<br>2.இடிகரை<br>3.காளப்பட்டி<br>4.காரமடை<br>5.நரசிம்மநாயக்கன் பாளையம்<br>6.பெரியநாயக்கன் பாளையம்<br>7.சரவணம்பட்டி<br>8,சர்க்கார் சாமக்குளம்<br>9.சிறுமுகை<br>10.துடியலூர்<br>11.வெள்ளக்கிணர்<br>12.அன்னூர் | 1.ஆலாந்துதுறை<br>2.செட்டிப்பாளையம்<br>3.சின்னவேடம்பட்டி<br>4.தாலியூர்<br>5.எட்டிமடை<br>6.இருகூர்<br>7.கண்ணம்பாளையம்<br>8.கருமத்தம்பட்டி<br>9.மதுக்கரை<br>10.மோப்பிரிபாளையம்<br>11.ஒத்தக்கால்மண்டபம்<br>12.பள்ளபாளையம்<br>13.பேரூர்<br>14.புலுவபட்டி<br>15. சூலூர்<br>16.தென்கரை<br>17.திருமலையம் பாளையம்<br>18.தொண்டாமுத்தூர்<br>19.வடவள்ளி<br>20.வேடபட்டி<br>21.வீரகேரளம்<br>22.வெள்ளலூர் | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | 34.வீரகேரளம்<br>35.வெள்ளலூர் | | | |
| 12 | உள்வட்டங்களின் எண்ணிக்கை | 26 | 10 | 16 | |
| 13 | வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை | 163 | 74 | 89 | குறைந்தபட்சம் 100 கிராமங்கள் |
| 14 | கிராம பஞ்சாயத்துக்களின் எண்ணிக்கை | 110 | 54 | 56 | |
| 15 | தலைமையிடத்தில் இருந்து வெகு தொலைவில் உள்ள கிராமத்தின் தூரம் | மேட்டுப்பாளையம் வட்டம் சின்னக்கள்ளிப்பட்டி (45 கி.மீட்டர்) | மேட்டுப்பாளையம் வட்டம் சின்னக்கள்ளிப்பட்டி (30 கி.மீட்டர்) | சூலூர் வட்டம் ஜே.கிருஷ்ணாபுரம் (45 கி.மீட்டர்) | |

4. முதன்மைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் தனதறிக்கையில், அரசாணை எண்.279, வருவாய்த்துறை, நாள் 09.06.2003–ல் நிர்ணயிக்கப்பட்ட கிராமங்களின் எண்ணிக்கையை தவிர ஏனைய அனைத்து அளவுகோல்களும் பூர்த்தி செய்கின்றன என்றும் எனவே கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையினை ஏற்று கோயம்புத்தூர் கோட்டத்தினைப் பிரித்து புதிய கோயம்புத்தூர் வடக்கு வருவாய் கோட்டத்தை உருவாக்கவும், எஞ்சிய கோயம்புத்தூர் கோட்டத்தினை கோயம்புத்தூர் தெற்கு வருவாய் கோட்டம் என மாற்றம் செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளார்.

5. மேலும் முதன்மைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் புதியதாக உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ள கோயம்புத்தூர் (வடக்கு) கோட்டத்திற்கு மொத்தம் 13 பணியிடங்கள் அனுமதிக்கலாம் என்றும், இதில் 2 பணியிடங்கள் மறுபரவலமர்த்தல் மூலமும், 11 பணியிடங்கள் புதியதாக உருவாக்கவும், கோயம்புத்தூர் (வடக்கு) கோட்டத்திற்கு வருடத்திற்கு தோராயமாக ஏற்படும் தொடரும் செலவினம் ரூ.25,21,500/–ம் மற்றும் தொடரா செலவினம் ரூ.10,26,000/–ம் நிதி ஒப்பளிப்பு வழங்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

6. முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவரின் பரிந்துரைகளை அரசு நன்கு ஆய்வு செய்து கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது:–

(i) கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் வருவாய் கோட்டத்தைப் பிரித்து புதிய கோயம்புத்தூர் (வடக்கு) வருவாய் கோட்டம் உருவாக்கப்படுகிறது.

(ii) எஞ்சிய கோயம்புத்தூர் வருவாய் கோட்டத்தினை கோயம்புத்தூர் (தெற்கு) வருவாய் கோட்டம் என பெயர் மாற்றம் செய்யப்படுகிறது.

(iii) புதியதாக உருவாக்கப்படவுள்ள கோயம்புத்தூர் (வடக்கு) கோட்டத்திற்கு மொத்தம் 12 பணியிடங்களும் இதில் 2 பணியிடங்கள் மறுபரவலமர்த்தல் மூலமும் 10 பணியிடங்கள் புதியதாக உருவாக்கவும் ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது. அவற்றின் விவரம் பின்வருமாறு:-

| வ. எண் | பணியிடத்தின் பெயர் | நிரந்தரம் / தற்காலிகம் | கோயம்புத்தூர் கோட்டத்தில் தற்போதுள்ள பணியிடங்கள் | கோயம்புத்தூர் கோட்டத்தில் நிறுத்தி வைக்க வேண்டிய பணியிடங்கள் | கோயம்புத்தூர் வடக்கு கோட்டத்திற்கு மாற்றம் செய்யும் பணியிடங்கள் | கோயம்புத்தூர் வடக்கு கோட்டத்திற்கு புதியதாக தோற்றுவிக்க வேண்டிய பணியிடங்கள் | கோயம்புத்தூர் வடக்கு கோட்டத்திற்கு அனுமதிக்க வேண்டிய பணியிடங்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 (6+7) |
| 1 | வருவாய் கோட்ட அலுவலர் | நிரந்தரம் | 1 | 1 | – | 1 | 1 |
| 2 | வருவாய் கோட்ட அலுவலரின் நேர்முக உதவியாளர் (வட்டாட்சியர் நிலை) | நிரந்தரம் | 1 | 1 | – | 1 | 1 |
| 3 | தலைமை உதவியாளர் (துணை வட்டாட்சியர் நிலை) | நிரந்தரம் | 1 | 1 | – | – | – |
| 4 | உதவியாளர் | நிரந்தரம் | 4 | 3 | 1 | 2 | 3 |
| 5 | இளநிலை உதவியாளர் | நிரந்தரம் | – | – | – | 2 | 2 |
| 6 | தட்டச்சர் | நிரந்தரம் | 1 | 1 | – | 1 | 1 |
| 7 | சுருக்கெழுத்தர் | நிரந்தரம் | 1 | 1 | – | – | – |
| 8 | பதிவறை எழுத்தர் | நிரந்தரம் | 1 | 1 | – | 1 | 1 |
| 9 | அலுவலக உதவியாளர் | நிரந்தரம் | 3 | 2 | 1 | 1 | 2 |
| 10 | இரவுக்காவலர் | நிரந்தரம் | 1 | 1 | – | – | – |
| 11 | ஈப்பு ஓட்டுநர் | நிரந்தரம் | 1 | 1 | – | 1 | 1 |
| 12 | மசால்ஜி | நிரந்தரம் | – | – | – | – | – |
| 13 | தோட்டக்காரர் | நிரந்தரம் | – | – | – | – | – |
| | | மொத்தம் | 15 | 13 | 2 | 10 | 12 |

(iv) 12 அலுவலர்களுக்கு 1 அலுவலக உதவியாளர் பணியாளர் பணியிடம் இருக்க வேண்டும். ஆனால் கோயம்புத்தூர் மற்றும் கோயம்புத்தூர் (வடக்கு) கோட்டங்களில் முறையே 7 / 7 அலுவலர்களுக்கு அலுவலக உதவியாளர் பணியிடமும், அலுவலக பணியில், தொய்வு ஏற்படகூடாது என்பதற்காக 1+1 வழங்கப்பட்டுள்ள நிலையில் இரவுக் காவலர் பணியிடம் வழங்க தேவையில்லை.

(v) மசால்சி மற்றும் இரவுக்காவலர் பணியிடங்களை அரசாணை (நிலை) எண்.49, ப(ம)நிசீ துறை, நாள் 14.5.2002–ன்படி வெளிமுகமை மூலம் நிரப்பப்பட வேண்டும்.

(vi) ஓட்டுநர் பணியிடம், அரசு கடித (நிலை) எண்.121/P/2006-1, ப(ம)நிசீ துறை, நாள் 10.8.2006 மற்றும் அரசாணை (நிலை) எண்.255, ப(ம)நிசீ துறை, நாள் 06.12.2007–ன்படி டெக்ஸ்கோ நிறுவனத்தின் மூலம் ஒப்பந்த அடிப்படையில் நிரப்பப்பட வேண்டும்.

(vii) மற்ற அனைத்து பணியிடங்களும் நிரப்பப்படும்போது உரிய விதிகள் மற்றும் அறிவுரைகள் பின்பற்றப்பட வேண்டும்.

(viii) புதியதாக உருவாக்கப்படும் கோயம்புத்தூர் (வடக்கு) கோட்டத்திற்கு ஒரு வருடத்திற்கு ஏற்படும் தொடரும் மற்றும் தொடரா செலவினங்களுக்கு நிதி ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது

**தொடரும் செலவினம்:**

| வ. எண். | விவரம் | ரூ. |
|---|---|---|
| 1. | பணியாளர்களின் ஊதியம் (புதிய ஊதிய ஏற்ற முறையில்) (ஆண்டு ஒன்றுக்கு) | 34,83,600 (10 பணியிடங்கள்) |
| 2. | வாடகை | பொதுப்பணித் துறையின் பரிந்துரையின்பேரில் நிர்ணயிக்கலாம். |
| 3. | மின்சாரக் கட்டணம் | 1,20,000 |
| 4. | எரிபொருள் (டீசல்) | 99,000 |
| 5. | தொலைபேசிக் கட்டணம் | 25,500 |
| | மொத்தம் | 37,28,100 |

**தொடராச் செலவினம்:**

| வ. எண் | விவரம் | ரூ. |
|---|---|---|
| 1. | வாகனம் | 6,00,000 |
| 2. | கணினி | 60,000 |
| 3. | தளவாடங்கள் | 1,50,000 |
| 4. | பிரிண்டர் | 20,000 |
| 5. | ஜெராக்ஸ் இயந்திரம் | 50,000 |
| 6. | நிகரி | 10,000 |
| 7. | தீயணைப்பான் | 20,000 |
| 8. | குளிர்சாதனம் | 25,000 |
| 9. | தொலைபேசி இணைப்புக் கட்டணம் | 6,000 |
| | மொத்தம் | 9,41,000 |

.. 7..

7. மேலே பத்தி 6-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினங்கள் பின்வரும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்க வேண்டும்.

(அ) <u>பணியாளர் சம்பளங்கள்</u>

<u>வருவாய் பணியிடங்கள்</u>

2053–00 மாவட்ட நிருவாகம் – 094 ஏனைய பணியாளரமைப்பு –I திட்டத்தில் சேராதது –AA – உட்கோட்ட பணியாளரமைப்பு

(i) 01 சம்பளங்கள்
(த.தொ.கு 2053 00 094 AA 0104)

(ii) <u>05 அலுவலக செலவுகள் 01 தொலைபேசி கட்டணங்கள் ரூ.31500/–</u>
(தொடரும் செலவினம் ரூ. 25,500/– மற்றும் தொடராச் செலவினம் ரூ.6000/–)
(த.தொ.கு 2053 00 094 AA 0515)

(iii) <u>05 அலுவலக செலவுகள் 03 மின் கட்டணங்கள் ரூ.1,20,000/–</u>
(த.தொ.கு 2053 00 094 AA 0533)

(iv) <u>அறைகலன்கள் ரூ 1,50,000/–</u>
05 அலுவலகச் செலவுகள் 05 அறைகலன்
(த.தொ.கு 2053 00 094 AA 0551)

(v) <u>19 இயந்திரமும் சாதனமும் 01 வாங்குதல் ரூ. 1,05,000/–</u>
(த.தொ.கு 2053 00 094 AA 1916)

(vi) <u>21 மோட்டார் வண்டிகள் 01 வாங்குதல் ரூ. 6,00,000/–</u>
(த.தொ.கு 2053 00 094 AA 2111)

(vii) <u>45–00 பெட்ரோலிய எண்ணெய் மற்றும் மசக்கெண்ணெய் ரூ. 99,000/–</u>
(த.தொ.கு 2053 00 094 AA 4502)

(viii) <u>76 கணினியும் துணை பாகங்களும் 01 வாங்குதல் ரூ.80,000/–</u>
(த.தொ.கு 2053 00 094 AA 7616)

8. மேலே பத்தி 6–இல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள செலவினம் ஒரு புது துணைப்பணியாகும் (New Instrument of Services). இதற்கான சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதலில் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து (Contingency Fund) முன்பணமாக ஒப்பளிப்பு செய்யப்படும். இதற்கான ஆணை நிதி (வ.செ.பொது.1) துறையிலிருந்து தனியாக வெளியிடப்படும். அடுத்த துணை மானிய கோரிக்கையில் இச்செலவினம் சேர்க்கப்பட்டு ஒப்புதல் பெறும்வரை தேவைப்படும் சரியான தொகையினை கணக்கிட்டு எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணம் ஒப்பளிப்பு செய்ய தமிழ்நாடு எதிர்பாரா செலவு நிதி விதிகள் 1963–ன் இணைப்பிலுள்ள படிவம் 'அ'–ன்படி இவ்வரசாணையின் நகலுடன் நிதி (வ.செ.பொது.1) துறைக்கு விண்ணப்பிக்குமாறு முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர், சென்னை கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் இச்செலவினத்தை 2015–2016 துணை மானியக் கோரிக்கையில் (Supplementary Estimate) சேர்க்கும்பொருட்டு உரிய வரைவு செயற்குறிப்பினை தவறாமல் உரிய நேரத்தில் நிதி (வருவாய்) துறைக்கு அனுப்புமாறு முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. இவ்வரசாணையின் இணைப்பில் கண்டுள்ள அறிவிக்கை, தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும். இப்புதிய வருவாய் கோட்டம் 09.02.2016–ஆம் நாள் முதல் செயல்படும்.

10. புதிய கோயம்புத்தூர் (வடக்கு) கோட்டம் உருவாக்குவது குறித்து மேலே பத்தி 6-இல் தெரிவிக்கப்பட்டுள்ள ஆணையினை செயல்படுத்த தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

11. இந்த அரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.9924/மை.ம.ஆ.பி நாள் 08.02.2016-இன் இசைவுடன் வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்க பேரேடு எண்.2184 (இரண்டாயிரத்து நூற்று எண்பத்து நான்கு).

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. வெங்கடேசன்,
அரசு செயலாளர்.

<u>பெறுநர்</u>

பணி மேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை – 600 079
(அரசிதழில் அறிவிக்கை வெளியிடுவதற்காக)
முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர், சென்னை–5.
கூடுதல் தலைமைச் செயலர்/நில நிர்வாக ஆணையர், சென்னை–5.
முதன்மைச் செயலாளர்/நிலச் சீர்திருத்த ஆணையர்,சென்னை–5.
குடிமைப் பொருள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு ஆணையர், சென்னை–5.
முதன்மைச் செயலாளர் / ஆணையர் மற்றும் இயக்குநர்,
நில அளவை மற்றும் நிலவரித்திட்டம், சென்னை–5.
மாவட்ட ஆட்சித்தலைவர், கோயம்புத்தூர் மாவட்டம்.
மாவட்ட கருவூல அலுவலர், கோயம்புத்தூர் மாவட்டம்.
மாநில கணக்காயர் (A&E), சென்னை–18.
மாநில கணக்காயர் (தணிக்கை), சென்னை–18. (பெயரிட்ட உறையில்)
மாநில கணக்காயர் (தணிக்கை), சென்னை–18.
மாநில கணக்காயர் (CAG) சென்னை–9.
இயக்குநர், எழுதுபொருள் அச்சுத்துறை, சென்னை–2.
அனைத்துத் துறை தலைவர்கள் / அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்
இயக்குநர், தகவல் மற்றும் மக்கள் தொடர்பு, சென்னை–9.
பதிவாளர், உயர்நீதிமன்றம், சென்னை–104.
முதன்மைச் செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, சென்னை–9.
ஆணையர் கருவூலக்கணக்கு துறை, சென்னை–15.

<u>நகல்:</u>

மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (வருவாய்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
செயலாளர், வருவாய்த்துறை அவர்களின் தனிச் செயலர், சென்னை–9.
நிதித்(வ.செ.பொது–I/வ.செ.பொது–II/வருவாய்(கக–I)/பொதுப்பணி-I/மை.மஆபி) துறை, சென்னை–9.
நிதி (C.M.P.C) துறை. சென்னை–9
இகோ/உதிரி –2.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர் 9.2.16.
9.2.16

## இணைப்பு

### அரசாணை (நிலை) எண்.64, வருவாய்த்துறை, நாள் 09.02.2016

### அறிவிக்கை

தமிழ்நாடு அரசு இதனால் அறிவிப்பது யாதெனில், கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள கோயம்புத்தூர் வருவாய் கோட்டத்தை இரண்டாகப் பிரித்து புதிய கோயம்புத்தூர் (வடக்கு) வருவாய் கோட்டம் 2016 ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள் 09–ஆம் நாளிலிருந்து கீழ்க்கண்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வட்டங்களை தனது ஆட்சி எல்லைகளாகக் கொண்டு செயல்படும்.

2. புதியதாக உருவாக்கப்படும் கோயம்புத்தூர் (வடக்கு) வருவாய் கோட்டத்தில் உள்ளடங்கும் வட்டங்கள், அவ்வட்டங்களில் அடங்கும் வருவாய் கிராமங்கள் மீது தற்போது கோயம்புத்தூர் வருவாய் கோட்டாட்சியரால் கையாளப்படும் அதிகாரங்கள் இனி கோயம்புத்தூர் (வடக்கு) வருவாய் கோட்டாட்சியரால் 2016 ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள் 09–ஆம் நாளிலிருந்து கையாளப்படும்.

### அட்டவணை

| வ.எண். | வருவாய் கோட்டத்தின் பெயர் | வட்டங்களின் பெயர் |
|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் (வடக்கு) | 1. கோயம்புத்தூர் (வடக்கு)<br>2. அன்னூர்<br>3. மேட்டுப்பாளையம் |

இரா. வெங்கடேசன்,
அரசு செயலாளர்.

// உண்மை நகல் //

பிரிவு அலுவலர் 9.2.16.
9/2/16